உ

சிவமயம்



யாழ்ப்பாணம்-சங்கானை

அமரர் அ. கந்தையா அவர்களின்

வாழ்க்கைத் துணைவி

# திருமதி. ஜெயலட்சுமி அம்மா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

1988

ஆனந்தா அச்சகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திரு. அம்பலவாணர் கந்தையா

அவர்கள்

தோற்றம்:
1882

நிறைவு:
1959

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரத்துவம் எய்திய

# திருமதி க. ஜெயலட்சுமி அம்மா

தோற்றம்:
29- 3- 1908

நிறைவு:
28- 12- 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடே முத்திக்கு வழி

| | |
|---|---|
| கிருதயுகத்தில் | பிரம்மவிசாரணையும் |
| திரேதா யுகத்தில் | ஸ்ரீ ராமனும் |
| துவாபர யுகத்தில் | கிருஷ்ணனும் |
| கலி யுகத்தில் | ஸ்ரீ சுப்ரமணியரும் |

வரமருளும் மூர்த்தங்களாகும் என சற்குமார வசன சுலோகம் கூறுகிறது.

வேதமே மயில் வாகனமாகவும், ஓங்காரமே சுப்ரமணிய மூர்த்தமாகவும், பிரம வேதத்தை சக்தி வேலாகவும், முருகனை வழிபாடாற்றும் முறைமையாகும். பிரமமாகிய சிவனும் முருகனும், ஒன்றேயாதலால் முருக வழிபாடு முத்தியைத் தருவதாகும். இதனையே கந்தபுராணமும் "அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி" என அறிவிக்கின்றது. தன்னைத் தானே அறிய, பிரமத்தை அறிய, முருக வழிபாடே சிறந்தது.

சங்கானையம்பதி தொன்று தொட்டு முருகவழிபாடு மிகுந்த ஊராகும். அதில் வெல்வில் முருகனை தன் குல தெய்வமாகப் பெற்று தின வழிபாடாற்றிய பெருமையுடையவர் ஸ்ரீ மதி. கந்தையா ஜெயலஷ்மி அம்மா அவர்களாகும். அவர் தன் தினசரி வழிபாட்டில் முருக மந்திரமாகவும், காக்கும் கவசமாகவும், விளங்கும் கந்தசஷ்டிக் கவசத்தைப் பாராயணம் பண்ணுபவராவார். அதோடு தான் பெற்ற செல்வம் பிள்ளைகள், வாழ்வு அனைத்துமே முருக வழிபாட்டினாலேயே கிடைத்த தென்றும், அதனாலேயேகாக்கப்படும் என்ற திட நம்பிக்கையுடையவராகும். அவரது மறைவு எமக்கு பெரும் இழப்பும், கவலையும், உடைத்தாயினும் அவர் முருக நிழலில் முத்தி அடைவார் என்பதில் சந்தேகமில்லை. அவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

ஓம் சாந்தி

"காக்க காக்க கனகவேல் காக்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள்

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் நித்தம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பள குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகுகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் மரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டுங் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்துடை யிரண்டும் பகர்வேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்கத்
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்கக்
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்கத்
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேறி இத்துன்ப சேனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தன்எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட,
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு:
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு, விழிகள் பிதுங்கிட,
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக
விடுவிடு வேலை. வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புந்நரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துஉயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அறணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காக
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமமும்
சரவண பவனே! சையொளிபவனே!
திரிபுர பவனே! திகழ்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இரட்சி, அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக, வேலா யுதனார்!
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுஉன் கடன்:
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே:
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனுல்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ள
மேவிய வடுவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனு பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

1 ஸ்தானம் பண் — தக்கராகம்
கணபதி தாளத்தின்போது
(கொடிமரத்தருகில்)

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவமென் கொலோ.

(சம்பந்தர்)

2 மூஷிக தாளத்தின்போது பண் — காந்தாரபஞ்சமம்
(கொடி மரத்தருகில்)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தை யுணின்றவர் தம்மையாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திரமஞ் செழுத்துமே.

(சம்பந்தர்)

3 சிம்மதாளம் பண் — நட்டபாடை
(கொடி மரத்தருகில்)

கொன்று செய்த கொடுமையாற் பல சொல்லவே
நின்ற பாவவினை கடாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர் பிரானிடங்
கன்றிேனோடு பிடி சூழ் கழுக்குன்றமே.

(சம்பந்தர்)

4 மயூரதாளம் பண் — இந்தளம்
(கொடி மரத்தருகில்)

பாதம் பணிவார்கள் பெறுபண்டம் மதுபணியா
யாதன் பொருளானே னறிவில்லே னருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரரு
ளாதீயுனக்காளாயினி யல்லேனெனலாமே (ட்டுறையு

(சுந்தரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 பிரமசந்தி (மத்தி) பண் — மேகராகம்

செல்வமல்கிய செல்வர் பராய் துறைச்
செல்வர் மேற் சிதையாதன
செல்வன் ஞான சம்பந்தன் செந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே.

(சம்பந்தர்)

6 இந்திர சந்தி (கிழக்கு) பண் — காந்தாரம்

ஆற்றலடல் விடையேறு மாலாவாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
றேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே

(சம்பந்தர்)

7 அக்கினி சந்தி (தென் கிழக்கு) பண் — கொல்லி

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகையிருந்ததே

(சம்பந்தர்)

8 யமசந்தி (தெற்கு) பண் — கௌசிகம்

நந்தி நாம நமச்சிவாய வெனுஞ்
சந்தையாற் றமிழ் ஞானசம்பந்தன் சொற்
சிந்தையான் மகிழ்ந்தேத்த வல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்க வல்லார்களே.

(சம்பந்தர்)

9 நிருசந்தி (தென் மேற்கு) பண் — நட்டபாடை

அங்கமும் வேதமு மோது நாவர்
அந்தணர் நாளு மடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருகனிலாவிய மைந்த சொல்லாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கயலார் புனற் செல்வமல்கு
சீர் கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

(சம்பந்தர்)

10 வருண சந்தி (மேற்கு) — பண் — சீகாமரம்

நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சா நாளும் வாழ் நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்ப புகழ் நாமம் செவிகேட்ப
நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

(சம்பந்தர்)

11 வாயு சந்தி (வடமேற்கு) — பண் — தக்கேசி

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்
மூவார் புரங்களெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார் (கள்
தூமா மழை நின்றதிர வெருவித் தொறுவின் னிரையோ
ஆமாம் பிணைவந்தணையுஞ் சாரலண்ணுமலையாரே. (டும்

(சம்பந்தர்)

12 குபேர சந்தி (வடக்கு) — பண் — தக்கராகம்

பொடியுடைமார்பினர் போர் விடையேறிப் பூதகணம் புடை
கொடியுடையூர் திரிந்தையங்கொண்டு பலபலகூறி (சூழ
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாகமாயவன் வாழ்
(கொளிபுத்தூர்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம்.

(சம்பந்தர்)


13 ஈசான சந்தி (வடகிழக்கு) — பண் — சாலாபாணி (சாதாரி)

தலையே நீ வணங்காய் — தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனை
தலையே நீ வணங்காய். (அப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வம்சாவழி



வல்லிபுரம் + அன்னப்பிள்ளை
ஜெயலட்சுமி அம்மா
+
கந்தையா
மனோன்மணி
+
பராக்கிரமராசா
தவமலர்
+
விஜயரத்தினம்
சண்முகதாசன்
+
சோதிமலர்
விஜயபாலா
ரஞ்ஜனி
+
ராஜ்குமார்
ரஞ்சன்
சுகுமார்
சுரேஸ்குமார்
நிஸ்கலா
செந்தன்
ரஜீவன்
ரூபிணி

# நன்றி

எங்கள் இல்லத்தின் தெய்வமாகத் துலங்கி, எமது நல்வாழ்வுக்கு ஒரு வழி காட்டியாய் விளங்கிய எமது அன்புத் தாயாரின் இறுதிக் கிரிகைகளின் போது சமுகந்தந்தும், வெளியிடங்களிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதலளித்த உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கானை
27 – 1 – 88

மகள், மகன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org